## தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழு- 2013

தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1994 இன் 11 ஆம் இலக்க விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பத்தினை அபிவிருத்தி செய்தல் அதிகாரச்சட்டத்தின் vii ஆவது பகுதியின் 40 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படவேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் மற்றும் அமுல்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு

கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் ஆணைக்குழுவினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி ஆணைக்குழுவின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து தேசிய விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப ஆணைக்குழுவின் 2013 திசெம்பர் 31 இல் இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமம் இல. 01 இன் 21(இ) பிரிவின் பிரகாரம் ஆணைக்குழுவின் நிதிக்கூற்றுக்கள் பிரிவுகளுடன் தேறிய சொத்துக்களின் வேறுபாடுகள் தொடர்பான கூற்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஆணைக்குழுவின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 213,415 தொகையான மிகையினைக் காண்பித்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்காக ரூபா 38,698 தொகையான பற்றாக்குறை காணப்பட்டது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டின் நிதி விளைவுகளில் ரூபா 252,113 தொகையான அதிகரிப்பினைக் காட்டியது. இதற்காக அரசாங்கத்தின் மீண்டெழும் மானியம் மீளாய்வாண்டின் போது ரூபா 3,310,850 இனால் அதிகரித்தமை பிரதான காரணமாக இருந்தது.

## 3.2. பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட நிதி நிலைமைக்கூற்றின் பிரகாரம் ஆணைக்குழுவின் தொழிற்படு மூலதன விகிதாசாரப் பகுப்பாய்வு கீழ்வருமாறு காணக்கூடியதாக இருந்தது.

| | 2013 ஆம் ஆண்டு | 2012 ஆம் ஆண்டு |
|---|---|---|
| நடைமுறை விகிதம் | 1.8 | 1.2 |
| விரைவு விகிதம் | 1.71 | 1.02 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்நாட்டு அறிவூட்டல் தொடர்பான கருத்துரை விஞ்ஞாபனம் மற்றும் தேசிய ஆய்வுகூட உபகரண நிலையத்திற்காக கொள்கையொன்றை வழங்குவதற்காக நியமிக்கப்பட்ட ஆய்வுக் குழுவின் செயற்பாடுகளுக்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டத்தில் ரூபா 400,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 33,673 தொகை அல்லது 8.5 சதவீதம் மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தது. 2013 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கருத்துரை விஞ்ஞாபனம் மற்றும் கொள்கைகளை வழங்க முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தில் 4 விஞ்ஞான மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்களின் செயற்பாடுகளை புலனாய்வு செய்து அறிக்கை வழங்குவதற்கும் தெங்கு ஆராய்ச்சி நிறுவனத்தின் முன்னைய ஆண்டு அறிக்கையில் நலன்களை பகுப்பாய்வு செய்வதற்கும் திட்டமிடப்பட்டிருந்தது. அந்த நிறுவன புலனாய்விற்காக ரூபா 1.23 மில்லியன் செலவிடப்பட்டு ஆண்டின் இறுதியில் இரண்டு நிறுவனங்கள் மாத்திரம் இறுதி அறிக்கை அனுப்பியிருந்ததுடன் தெங்கு ஆராய்ச்சி

நிறுவனத்தின் முன்னைய ஆண்டின் அறிக்கையை பகுப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்திறமையீனங்கள்**

ஆணைக்குழு அலுவலகத்தை நடாத்திச் செல்வதற்காக 2012 திசெம்பர் 15 ஆந் திகதி தொடக்கம் 2015 திசெம்பர் 14 ஆந் திகதி வரை செல்லுபடியான வாடகை உடன்படிக்கையின் கீழ் சகல நிறுவனத் தேவைப்பாடுகளையும் பூர்த்தி செய்யமுடியாத கட்டிடம், உரிய கொள்வனவு நடைமுறைகள் கடைப்பிடிக்கப்படாமல் தனியாரிடமிருந்து வாடகைக்கு பெறப்பட்டிருந்தது. முழுமையான வாடகை உடன்படிக்கை பூர்த்திசெய்யப்படுவதற்கு முன்னர் இந்த வாடகை உடன்படிக்கையில் கைச்சாத்திட்டமையின் காரணமாக ஆணைக்குழுவிற்கு ரூபா 740,000 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது.

**4.3 பதவியணியினர் நிருவாகம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நிறுவனத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 19 ஆக இருந்ததுடன் அதில் 03 சிரேஷ்ட விஞ்ஞானிகள் பதவிகளும் ஒரு முகாமைத்துவ உதவியாளர் பதவியும் வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) 03 சிரேஷ்ட விஞ்ஞானிகள் பதவிகளுக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக விண்ணப்பம் கோரப்பட்டிருந்ததுடன் 2014 மே 02 ஆந் திகதி ஒரு உத்தியோகத்தர் சேர்க்கப்பட்டிருந்தார்.

**5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**5.1 உள்ளகக் கணக்காய்வு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆணைக்குழுவில் உள்ளகக் கணக்காய்வு அலகொன்று கணக்காய்வுத் திகதி வரையிலும் ஸ்தாபிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டில்

அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவினால் ஒரு கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) 2009 யூன் 09 ஆந் திகதிய டீஎம்ஏ/2009(1) ஆம் இலக்க முகாமைத்துவ கணக்காய்வுத் திணைக்களத்தின் சுற்றுநிருபத்தின் 09 ஆம் பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான காலாண்டு ரீதியான கணக்காய்வு அறிக்கை, கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்கூட்டங்களில் கலந்துரையாடுவதற்காக சமர்ப்பிக்கப்பட்டிராததுடன் ஆண்டின் போது ஒரு கணக்காய்வு ஐயவினா மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

ஆணைக்குழுவினால் 2013 ஆம் ஆண்டிற்காக ரூபா 33 மில்லியன் தொகையான செலவின மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. ஆணைக்குழுவின் உள்ளவாறான செலவினம் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 22 மில்லியனாக இருந்ததுடன் அது அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டில் 66 சதவீதமாக இருந்தது. அதன் பிரகாரம், ஆணைக்குழுவினால் பாதீடு கட்டுப்பாட்டுக் கருவியாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 5.3 ஆண்டறிக்கையை பாராளுமன்றத்தில் முன்வைத்தல்

2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.3 ஆம் பந்தியின் பிரகாரம் ஆண்டறிக்கை நிதியாண்டு முடிவடைந்து 150 நாட்களுக்குள் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2011 இன் ஆண்டறிக்கை 2013 யூலை 18 ஆந் திகதியும் 2012 இன் ஆண்டறிக்கை 2014 சனவரி 10 ஆந் திகதியும் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் அவ்வப்போது தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றன.

(அ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(ஆ) கொள்வனவு நடைமுறைகள்

(இ) கணக்கீடு

(ஈ) முகாமைத்துவ நலிவுகள்